
தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden



# இயல் விருது விழா 2015

## Lifetime Achievement Award Ceremony 2015

Toronto, 18 June 2016

*With the Best Compliments Of*

## Yarlmetal Fabrications Inc



Vyramuthu Sornalingam, C.E.O

**221, Finchdene Square,**
**Scarborough, Ontario**
**M1B 3V1**

**Tel: 416 297 9013**
**Fax: 416 297 9513**

DIGITAL MAXIM
local books for global readers

வைதேகி ஹெர்பர்ட்டின் அருமையான
ஆங்கில மொழிபெயர்ப்பில்,
'சொல்லுக்குச் சொல் ஆங்கிலப்
பொருளுடன்' உள்ள சங்கத்தமிழ்
நூல்களைப் பெற்றுக் கொள்ள எங்களைத்
தொடர்பு கொள்ளவும்.

**We are a specialty publisher...** with the state-of-art publishing platform! If you are an author, we would like to talk to you. Publish with us in 'print' and 'eBook' formats.

**... and a publishing services provider** Are you a publisher needing help to publish your books in 'print' and all 'popular eBook' platforms? Let us help you!

For details, please call 1 (248) 824-9555 or visit us at www.digitalmaxim.com
Friend and follow us at www.facebook.com/DigitalMaxim

*With the Best Compliments Of*

HomeLife/GTA Realty Inc.

Brokerage



Raja Mahendran, P.Eng

**Broker/ Owner**

**5215, Finch Ave. E, Suite #203, Scarborough**
**145 Traders blvd. Suite #28, Mississauga**

**Tel: 416 321 6969**
**Tel: 905 712 2666**



Financial Security Planning

Call (416) 291-0451, ext. 227
Cell: (416) 518-9489

**Jeganathan Balasundaram**

FINANCIAL SECURITY AND INVESTMENT REPRESENTATIVE

NATIIONAL QUALITY AWARD WINNER

*To help our clients reach their goals and dreams.*

Freedom 55 Financial and design are trademarks of London Life Insurance Company. Quadrus Investment Services Ltd. and design are trademarks of Quadrus Investment Services Ltd. used with permission by London Life Insurance Company.

Freedom 55 Financial

A division of London Life Insurance Company

QUADRUS

Quadrus Investment Services Ltd.

*With the best compliments of*

# MJ LAWYERS LLP

**Barristers, Solicitors & Notaries Public**



**Manuel Jesudasan**
Barrister, Solicitor & Notary Public

Areas of Practice: Residential and Commercial Real Estate;
Immigration; Criminal; Power of Attorney
Email: manuel@mjlawyers.com

**Veluppillai Indrasigamany**
Barrister, Solicitor & Notary Public
Formerly of Immigration and Refugee Board.

Areas of Practice: Immigration; Civil Litigation; Real Estate
Email: Indrasigamany@mjlawyers.com

**80 Corporate Drive, Suite #210**
**Scarborough, ON M1H 3G5**
**Tel: 416 444 8070**
**Fax: 416 444 9105**
**www.mjlawyers.com**

Jaya Creative Solutions 416•275•0070

தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**

# இயல் விருது விழா 2015

## Lifetime Achievement Award Ceremony 2015

June 18, 2016

Radisson Hotel, Toronto, Canada

## தமிழ் இலக்கியத் தோட்டம் - Tamil Literary Garden

கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டம், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், விமர்சகர்கள், கொடையாளர்கள் ஆகியவர்களின் ஆதரவுடன் 2001ம் ஆண்டு ரொறொன்ரோவில், உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளையாகும். அரிய தமிழ் நூல்களை மீள் பதிப்பு செய்வது, தமிழ், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பை ஊக்குவிப்பது, மாணவர் கல்விக்கு புலமைப் பரிசில் வழங்குவது, தமிழ் பட்டறைகள் ஒழுங்கு செய்வது, கனடிய நூலகங்களுக்கு இலவசமாக தமிழ் நூல்கள் அளிப்பது போன்ற சேவைகள் இதனுள் அடங்கும். இந்த இயக்கத்தின் முக்கியமான பணி வருடா வருடம் உலகத்தின் மேன்மையான தமிழ் இலக்கிய சேவையாளர் ஒருத்தருக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது வழங்கி கௌரவிப்பதாகும். இயல் விருது என்றழைக்கப்படும் இந்த விருது பாராட்டுக் கேடயமும் 2500 டொலர்கள் பணப்பரிசும் கொண்டது.

புனைவு, அபுனைவு, கவிதை, தமிழ் தகவல் தொழில் நுட்பம், மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் வருடா வருடம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்கும் சிறந்த மாணவருக்கு ஆயிரம் டொலர் புலமைப் பரிசிலும் உண்டு. வருடாவருடம் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்துடன் இணைந்து தமிழ் இலக்கியத் தோட்டம் தமிழ் அறிஞர்களின் விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. அத்துடன் மறக்கப்பட்ட நிலையில் உள்ள நாட்டுக்கூத்து போன்ற கலைகளுக்கு புத்துயிரூட்டும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

Founded in 2001, the Tamil Literary Garden is a Toronto based charitable organization committed to promoting the development of literature and studies in Tamil internationally. Its mandate includes awards, creative writing, scholarship to students, translations, book releases, Tamil theatre performances, conferences and workshops. It recognizes that despite the richness and significance of contemporary writing, very little has been done to promote or to celebrate the authors who have made major contributions to Tamil. Among its activities, the event that takes centre stage is a Lifetime Achievement Award, given annually to a writer, scholar, critic or editor, who over a period of time has made very significant contribution to the growth or study of Tamil literature. The Lifetime Achievement Award ( also known as Iyal Virudhu ) consists of a plaque and a cash prize of C$2500.

The Tamil Literary Garden also has instituted other awards: Awards for Fiction, Non-fiction, Poetry, Information Technology in Tamil, Translation and Scholarship to an undergraduate enrolled in a Tamil studies program. It also organizes Tamil Theatre performances (Naddu Koothu) and lecture series in conjunction with the Department of English - University of Toronto.

Tamil Literary Garden
76, Legacy Drive
Markham, ON L3S 4B5
Canada
Tel: 905 201 9547
Email:appatlg@gmail.com
Web: www.tamilliterarygarden.com

தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**



**Prof. Chelva Kanaganayakam**
**Past President**



**Prof. A. J. V. Chandrakanthan**
**Patron**

## Board of Directors



**Manuel Jesudasan, Barrister & Solicitor**
**President**



**Appadurai Muttulingam - Writer**
**Secretary**



**N.K. Mahalingam – Writer/ Translator**
**Treasurer**



**Selvam Arulanandam – Editor/ Writer**
**Director**



**Usha Mathivanan – Consultant**
**Director**

தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden

## *Lifetime Achievement Award - 18 June 2016*
## *Programme*

| | |
|---|---|
| RECEPTION | 6.00 - 6.30 |
| AWARDS | 6.30 - 8.30 |
| | |
| Welcome – Patron | 6.30 - 6.35 |
| Introduction – President | 6.35 - 6.40 |
| Fiction Award | 6.40 - 6.45 |
| Non-Fiction Awards | 6.45 - 6.50 |
| Poetry Award | 6.50 - 6.55 |
| Gueest of Honour - Speech | 6.55 - 7.05 |
| Translation Awards | 7.05 - 7.10 |
| Information Technology in Tamil Award | 7.10 - 7.20 |
| Student scholarship Award | 7.20 - 7.30 |
| Special Recognition Award | 7.30 - 7.35 |
| | |
| Special Recognition Award | 7.35 - 7.45 |
| Video presentation | 7.45 - 7.50 |
| Chief Guest – Speech | 7.50 - 8.00 |
| Introduction of R.Mayooranathan and citation | 8.00 - 8.05 |
| Iyal Award | |
| Acceptance speech | 8.05 - 8.25 |
| | |
| Vote of thanks | 8.25 - 8.30 |

# AWARD RECIPIENTS FOR 2015



## Lifetime Achievement Award

Recipient: **R.Mayooranathan**


*Sponsored by Vaithehi, Balamurugan and Apsara*



## Fiction Award given in memory of Professor Kanapathipillai

Recipient: **Shoba Sakthi for 'Kandy Veeran.'**

*Sponsored by Dr Oppilamani Pillai*
*Lalitha and Jay Jayaraman*



## Non-Fiction Award given in memory of Kirubaharan Sinnadurai

Recipient: **Ashokamitran for 'Kurukku Veddukal.'**

*Sponsored by Dr.Thushiyanthy and Dr.S.Sriharan*



## Poetry Award given in memory of Professor A.W. Mailvaganam

Recipient: **Kumaragurubaran for 'Marupadiyum muthalil irunthu arampikka mudiyaathu.'**
*Sponsored by Nandakumar Mailvaganam*



## Translation Award (Tamil to English)

Recipient: **N. Kalyan Raman for 'Farewell, Mahatma.'**

*Sponsored by Margie and Vincent de Paul*



## Translation Award (English to Tamil) in memory of V.T.Ratnam

Recipient: **Puviyarasu for 'Mirthathin Puththakam.'**

*Sponsored by Kumar Ratnam*



## Information Technology in Tamil Award given in memory of Sundara Ramaswamy

Recipient: **S. Raja Raman**

*Sponsored by Sura Memorial Fund Kalachuvadu Trust*



## Special Recognition Award Given in memory of Ranjith Selva

Recipient: **So.Pathmanathan**


*Sponsored by Bairavee Ranjith*



## Special Recognition Award in honour of All Teachers of the World

Recipient: **Brenda Beck**

*Sponsored by Canadian Tamil Congress*



## Scholarship Award to a Student for Outstanding Essay

Recipient: **Renuka Murthi**

*Sponsored by Bahir Vivekanand B.Sc, D.Ch*



# இயல் விருது

## இ. மயூரநாதன்

Lifetime Achievement Award
**Recipient: R.Mayooranathan**

Sponsored by Vaithehi, Balamurugan and Apsara

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வருடா வருடம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது இம்முறை தமிழ் விக்கிப்பீடியா என்னும் இணையத்தளக் கலைக்களஞ்சிய கூட்டாக்கத் திட்டத்தில் முதல் பங்களிப்பாளராக இணைந்து தொடர்ந்து இன்றுவரை சிறப்பாகப் பங்களித்துவரும் திரு இ.மயூரநாதன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இது தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 17வது இயல் விருது ஆகும்.

இலங்கையில் வண்ணார்பண்ணை என்னுமிடத்தில் பிறந்த திரு மயூரநாதன். கட்டடக்கலையில் முதுநிலை பட்டம் பெற்றபின்னர் கொழும்பில் 17 ஆண்டுகள் பணியாற்றினார். 1993-ல் துபாய்க்குப் புலம்பெயர்ந்தவர் தமிழ் அறிவியல் துறையில் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். 2001ம் ஆண்டு ஆங்கிலத்தில் விக்கிப்பீடியா ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் பின்னணியில் உள்ள தொழில்நுட்பம் கொடுக்கும் ஆற்றலையும், அறிவு உருவாக்கத்தில் அதன் மகத்தான பங்களிப்பையும் உணர்ந்து தமிழ் விக்கிப்பீடியாவை உருவாக்குவதற்கு 2003ம் ஆண்டிலேயே பங்களிக்கத் தொடங்கினார். முதல் 12 மாதங்கள் தனியாளாக அதன் அடிப்படை வசதிகளைச் செய்து வலுவான தளமாக அமைப்பதற்கு உழைத்தார். பின்னர் சிறிது சிறிதாக இணையத்தளத்தை விரிவாக்கி திறமையான பிற பங்களிப்பாளர்களுடன் இணைந்து சிறப்பாக இயங்கும் கூட்டுக்குழுமமாக அது உருவாக வழிகோலினார்.

தமிழ் விக்கிப்பீடியாவே தமிழில் முதன்முதலாக அனைத்துலக பங்களிப்பாளர்கள் கூட்டாக இயங்கி ''Web 2.0'' என்னும் முறையில் உருவாக்கப்பட்ட மாபெரும் படைப்பு. இதில் ஓரளவிற்குக் கணிசமாகப் பங்களித்திருப்பவர்கள் ஏறத்தாழ 100 பேர்தான் எனினும், இன்று 88,000 பேருக்கும் அதிகமானவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். கலைக்களஞ்சியத்தில் ஏற்றப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை 83,000. இதில் 80 வீதம் கட்டுரைகளை ஒதுக்கிவிட்டாலும்கூட 16,600 தரமான கட்டுரைகள் என்பது 24 தொகுதிகள் அடங்கிய அச்சுக் கலைக்களஞ்சியத்திற்கு சமமானது. இம்மாபெரும் படைப்பில் மயூரநாதன் மட்டுமே முதல் கட்டுரையிலிருந்து இன்றுவரை 4200-க்கும் மேற்பட்ட தரமான கட்டுரைகளைத் தொடங்கி உருவாக்கியுள்ளார். இவற்றை அச்சிட்டால், குறைந்தது 500 பக்கங்கள் கொண்ட எட்டு நூல்களாக அமையும். இந்தத் திட்டத்தை இவ்வளவு நேர்த்தியாக முன்னெடுத்துச் சென்றதிலும், கூட்டுழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்துவதிலும் இவருடைய இடையறாத உழைப்பும் நல்லறிவும் உதவியிருக்கிறது என்பது உண்மை. இன்று தமிழ் விக்கிப்பீடியா மாதந்தோறும் 3.5 மில்லியன் பார்வையாளர்களை எட்டும் பிரபல தளமாகவுள்ளது. உலகப் பன்மொழி திட்டத்தில் இன்று 291 மொழிகளில் விக்கிப்பீடியாக்கள் இயங்குகின்றன. இதில் தமிழ் மொழியின் இடம் 61. இந்திய மொழிகளில் உள்ள விக்கிப்பீடியாவை அலசியதில், எண்ணிக்கை அடிப்படையில் தமிழ் இரண்டாவதாக வந்தாலும், தரத்தின் அடிப்படையில் பல வகைளில் தமிழ் விக்கிப்பீடியா முதலாவதாக நிற்கின்றது ( சிச்சு ஆலெக்சு Shiju Alex 2010 இல் செய்த தர ஒப்பீடு ). இப்படிப்பட்ட தமிழ் விக்கிப்பீடியாவைத் தொடக்கத்தில் தனியொருவராக உழைத்து இன்றைய நிலைக்கு அதனை வளர்த்தெடுத்ததில் மயூரநாதன் அவர்களின் பங்களிப்பு பெரும் பாராட்டுதலுக்குரியது.

மனித குலத்தின் அறிவு உருவாக்கத்தில் விக்கிப்பீடியாவின் தோற்றம் ஒரு பாய்ச்சல் எனலாம். தமிழ் மொழியை நவீன அறிவுத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஒரு மொழியாக வளர்த்தெடுப்பதிலும், தமிழ் மூலமான அறிவு உருவாக்கம் பரவல் தொடர்பிலும் தமிழ் விக்கிப்பீடியாவின் முக்கியத்துவம் பல மட்டங்களிலும் உணரப்பட்டு வருகிறது. அண்மைக் காலங்களில், தமிழ்மொழி வளர்ச்சி தொடர்பான மாநாடுகளிலும், தமிழ் இணையத் தொழில்நுட்ப கருத்தரங்குகளிலும், அரசு சார்ந்த சில நிறுவனங்களின் தமிழ் வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்களிலும் தமிழ் விக்கிப்பீடியாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இன்று, தமிழ் விக்கிப்பீடியா மூலமான பங்களிப்புகள் மரபுவழியான பிற இலக்கிய முயற்சிகளுக்கு ஈடான முக்கியத்துவம் கொண்டவையாக வளர்ந்துள்ளன. அத்துடன் இது எதிர்காலத் தமிழ் வளர்ச்சிக்கான நம்பிக்கையாகவும் விளங்குகிறது. அதன் வளர்ச்சியில் முனைப்புடன் ஈடுபட்ட குழுமத்தை பாராட்டுவதுடன் முதல் பங்களிப்பாளராக தமிழ் விக்கிப்பீடியாவின் உருவாக்கத்துக்கு வித்திட்ட திரு இ.மயூரநாதனுக்கு வாழ்நாள் சாதனயாளர் விருதை வழங்கி கௌரவிப்பதில் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## ஷோபாசக்தி

புனைவுப் பரிசு

**கண்டி வீரன்**

**Fiction Award given in memory of Professor Kanapathipillai**

**Recipient: Shobasakthi**
Sponsored by Dr.Oppilamani Pillai, Lalitha and Jayaraman


ஷோபாசக்தி 1967 நவம்பர் 18 ஆம் தேதி பிறந்தார். ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளில் ஒருவரும், நடிகரும் ஆவார்.அந்தோனிதாசன் யேசுதாசன் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது பிரான்சில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். சிறுகதை, நாவல், விமர்சனம், நாடகம், திரைப்படம், பதிப்பு ஆகியன இவரது முதன்மையான செயற்பாட்டு வெளிகளாக உள்ளன. இவர் நடித்து வெளிவந்த தீபன் என்ற பிரெஞ்சு மொழித் திரைப்படம் 2015 கான் திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்துக்கான தங்கப்பனை விருதை வென்றது.

ஷோபாசக்தி ஆரம்பத்தில் எழுதிய கவிதைகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான "ஈழமுரசு", "செய்திக்கதிர்" போன்ற பத்திரிகைகளில் வெளியாகின. இவர் அந்தக் காலகட்டத்தில் நாடகங்களும் எழுதி நடத்தியிருக்கிறார். 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஷோபாசக்தீ என்ற புனைப்பெயரில் சிறுகதைகள், நாடகங்கள், ஈழ யுத்தத்தின் போது அவருக்கு கிடைத்த தனிப்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றை அரசியல் கட்டுரைகள் மற்றும் நாவல்களாக எழுதத் தொடங்கினார் பாரிஸிலிருந்து வெளியாகிய 'அம்மா' மற்றும் 'எக்ஸில்' இதழ்களில் இவருடைய படைப்புகள் தொடர்ச்சியாக வெளிவந்தன
அவருடைய நாவல்களான 'கொரில்லா' (2001), 'ம்' (2010) , Box (2015) ஆகியவை அவருக்கு உலகப் புகழை ஈட்டித் தந்தன. கொரில்லா 2008 ம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அவரது இரண்டாவது நாவலும் 2010 ம் ஆண்டு ஆங்கிலத்தில் Traitor என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டது. மலையாளத்தில் இந்த நாவலை மாத்ருபூமி வெளியிட்டது.

ஷோபாசக்தீயின் சினிமா நுழைவு 2009 இல் செங்கடல் (Dead Sea) திரைபடத்தின் மூலம் தொடங்கியது. தமிழ் மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் குறித்த படமான செங்கடலில் லீனா மணிமேகலை மற்றும் ஜெரால்டுடன் இணைந்து ஷோபாசக்தி திரைக்கதை எழுதியதுடன் ஒரு கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார். இந்தப் படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு விருதுகளை வென்றிருக்கிறது.

ஷோபாசக்தியின் "கண்டிவீரன்" சிறுகதை தொகுப்பு இனவுரிமை முழக்கங்களையெழுப்பி தன்னை முன்னிறுத்திக் கொண்ட எந்தவொரு அரசியலும், இலக்கியமும் பதிவு செய்யாது நழுவிகொண்ட மனித வாழ்வை சித்திரங்களாய் கொண்டிருப்பது. இந்த தொகுப்புக்கு 2015-ம் ஆண்டு புனைவுப் பரிசை ஷோபாசக்தி அவர்களுக்கு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

---



## அசோகமித்திரன்

அபுனைவுப் பரிசு

**குறுக்கு வெட்டுகள்**

**Non-Fiction Award given in memory of Kirubaharan Sinnadurai**

**Recipient: Ashokamitran**
Sponsored by Dr.Thushiyanthy and Dr.S.Sriharan

நவீன தமிழ் இலக்கியத்தின் மகத்தான படைப்பாளுமையான தியாகராஜன் என்ற இயற்பெயர் கொண்ட அசோகமித்திரன் 1931ம் ஆண்டு ஆந்திர பிரதேசத்தில் உள்ள செகந்திராபாத் நகரத்தில் பிறந்தவர். சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு என இவரது படைப்புலகம் பரந்து விரிந்தது. கரைந்த நிழல்கள், ஒற்றன், ஆகாயத் தாமரை, தண்ணீர், பதினெட்டாவது அட்சக்கோடு, மானசரோவர் ஆகியவை இவருடைய முக்கியமான நாவல்கள். எளிமையும், மெல்லிய நகைச்சுவையும் கொண்டது இவருடைய எழுத்து. தமிழ் இலக்கியத்துக்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுத் தந்தவை இவரது கதைகள். அமெரிக்க இலக்கியங்களைத் தமிழில் அறிமுகம் செய்த தனிப்பெருமை இவருக்குரியது. இவரது நாவல்கள் இந்திய மற்றும் அயல் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. ஆங்கில நாளிதழ்களில் தொடர்ந்து எழுதி வரும் அசோகமித்திரன், அயோவா பல்கலைக்கழகத்தில் எழுத்தாளர்களுக்கான சிறப்புப் பயிலரங்கில் கலந்து கொண்டவர்.

1996 இல் 'அப்பாவின் சிநேகிதர்' சிறுகதை தொகுப்புக்காக சாகித்திய விருது பெற்றவர். சாதாரணமான கதாபாத்திரங்களின் மூலம் அசாதாரண கருத்துக்களை வெளிப்படுத்துவதாக இவரது படைப்புகள் அமைந்திருக்கும் என்பது இவரை தொடர்ந்து வாசிக்கும் வாசகர்களின் கருத்தாகும். அசோகமித்திரனின் கலையின் சிறப்பம்சங்கள் என்னவெனில் கண்முன் காணும் இந்த உலகியல்வாழ்க்கையை மட்டுமே எழுதவேண்டும் என அவர் எண்ணுகிறார். அவர் பிறந்து வளர்ந்தது செகந்திராபாத். வாழ்ந்தது சென்னை. இரு பெருநகரங்களின் கீழ்நடுத்தர வர்க்க மனிதர்களின் வாழ்க்கையையே அவர் எழுதுகிறார்.

அசோகமித்திரனின் "குறுக்கு வெட்டுகள்" என்னும் கட்டுரைத்தொகுப்பு இயல், இசை, நாடகம், ஆடிய ஆட்டம் என்ன, சில நூல்கள் என மூன்று பகுதிகளைக் கொண்டது. எல்லாமே வாழ்க்கையைப் பற்றியவை.

தமிழ் இலக்கிய உலகின் பிதாமகனான அசோகமித்திரனின் நுட்பமான மனநிலையையும், பன்முக ஆளுமையினையும் வெளிப்படுத்தும் இந்நூலுக்காக 2015-ம் ஆண்டு அபுனைவுப் பிரிவில் இப்பரிசை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## குமரகுருபரன்

கவிதைப் பரிசு

**மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது**

**Poetry Award given in memory of Professor A.W.Mailvaganam**

**Recipient: Kumaraguruparan**
Sponsored by Nandakumar Mailvaganam

1974ல் திருநெல்வேலியில் பிறந்த குமரகுருபரன், அந்திமழை இதழுக்காக "விகடன் சிறந்த மாணவ ஆசிரியர்" விருதை பெற்றிருக்கிறார். இவர் தொடர்ந்து குமுதம், விண்நாயகன், தினமலர் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றி, தற்போது காட்சி ஊடகம் சார்ந்து இயங்கி வருகிறார்.

''இன்னொருவனின் கனவு'' என்னும் சினிமா குறித்த கட்டுரை நூல், ''பயணிகள் கவனிக்கவும்'' எனும் பயண நூலையும் எழுதியிருக்கும் குமரகுருபரனின் முதல் கவிதை நூல் 2014ல் வெளியானது. ''ஞானம் நுரைக்கும் போத்தல்'' (ஆதிரை பதிப்பகம்) எனும் அக்கவிதை நூல் பல ஆர்வலர்களின் கவனத்தையும், பாராட்டுதல்களையும் பெற்றது. சமகால எழுத்துலகத்தின் மாபெரும் ஆளுமையான ஜெயமோகன் இந்நூலைக் குறித்து இவ்வாறு கூறுகிறார்:

''கலையில் கடவுளுக்கு ஓர் இடமுண்டு என்று கலைஞன் அறிவான். ஆகவேதான் அவன் தன்னை அவருக்குச் சமானமாக அவ்வப்போது நினைத்துக்கொள்கிறான். இலக்கியத்தில் மொழியின் தற்செயலுக்கு பெரும்பங்குள்ள வடிவம் கவிதை. மொழி கவிஞனின் திட்டங்களைக் கலைக்கையில் நல்ல கவிதை சாத்தியமாகிறது. நவீனத்தமிழில் அபூர்வமாகவே மொழியால் கலைக்கப்பட்ட சித்தம் கவிதையாகி வெளிவருகிறது. பிரமிள், தேவதேவன், ஆத்மாநாம், அபி, சு.வில்வரத்தினம் என நான் விரும்பும் சில விதிவிலக்குகள் உண்டு. அத்தகைய விதிவிலக்குகளின், ஆக்கங்களின் சிறிய பட்டியலில் இடம்பெறும் கவிதைகளைக் கொண்டது குமரகுருபரனின் 'ஞானம் நுரைக்கும் போத்தல்.'

இவருடைய இரண்டாவது கவிதைத் தொகுதியான ''மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது'' (உயிர்மை) முதல் தொகுதியை காட்டிலும் அதிக பாய்ச்சலைக் கொண்டது. விமர்சகர்கள் இதை 'தமிழ்க் கவிதையின் அடுத்த கட்ட நகர்வு' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குமரகுருபரன் அவர்களுக்கு 2015-ம் ஆண்டுக்கான கவிதைப்பரிசை ''மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது'' என்ற கவிதை தொகுதிக்கு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது

---



## ந. கல்யாணராமன்

மொழிபெயர்ப்பு பரிசு - தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு

**Farewell, Mahatma**

**Translation Award**
**Tamil to English**


**Recipient: N. Kalyan Raman**
Sponsored by Margie and Vincent de Paul

ந. கல்யாணராமன் (64) கடந்த 25 ஆண்டுகளாக தற்காலத் தமிழ்ப் புனைகதைகள் மற்றும் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருகிறார். இதுவரை ஒன்பது தமிழ்ப் புனைகதை நூல்கள் இவருடைய மொழிபெயர்ப்பில் வெளியாகியுள்ளன. அசோகமித்திரனின் புகழ் பெற்ற படைப்புகளான ஒற்றன், மானசரோவர் ஆகியவை இவற்றில் அடக்கம். சி.சு. செல்லப்பாவின் ''வாடிவாசல்'' குறுநாவலும், வாஸந்தியின் "யுகசந்தி" நாவலும் இவருடைய மொழியாக்கத்தில் வெளிவந்திருக்கின்றன. தற்சமயம் பூமணியின் 'பிறகு' மற்றும் 'வெக்கை' நாவல்களின் மொழியாக்கத்தை முடித்திருக்கிறார்.

கவிதை மொழிபெயர்ப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவரும் இவர் ஏறக்குறைய 200 கவிதைகளை மொழி-பெயர்த்திருக்கிறார். இவை பத்திரிகைகளிலும் இணைய சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. இந்திய அரசின் பொது நிறுவனமான சாகித்ய அகாதமியின் 'இந்தியன் லிட்டரேச்சர்' சஞ்சிகைக்காக தமிழ்நாடு மற்றும் ஈழப் பெண் கவிஞர்களின் கவிதைகளை மொழிபெயர்த்து "Women's Poetry from India and Sri Lanka: A Current of Contemporary Voices" (Indian Literature -Nov-Dec, 2009) என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறார். பத்திரிகைகளுக்காக அவ்வப்போது தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கியம் மற்றும் அரசுக் கொள்கை (Public Policy) தொடர்பான கட்டுரைகளை எழுதிவருகிறார்.

சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் மின்னணு பொறியியல் இளங்கலைப் பட்டமும், கல்கத்தா இந்திய மேலாண்மைக் கழகத்தின் முதுநிலை மேலாண்மை டிப்ளோமாவும் பெற்றிருக்கும் இவர், தொழில்முறையில் ஒரு பொறியியல் மேலாளர். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் பல்வேறு தொலைத் தொடர்பியல் நிறுவனங்களிலும் பணிபுரிந்து தன் பணிக்காலத்தை நிறைவு செய்திருக்கிறார்.

தேவிபாரதியின் சிறுகதைகளை Farewell, Mahatma என்ற பெயரில் மொழிபெயர்த்திருக்கும் திரு. ந. கல்யாணராமன் அவர்களுக்கு, 2015-ம் ஆண்டுக்கான மொழிபெயர்ப்பு பரிசை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## புவியரசு

மொழிபெயர்ப்பு பரிசு
ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு
**மிர்தாதின் புத்தகம்**

**Translation Award in memory of V.T.Ratnam**

**Recipient: Puviyarasu**
Sponsored by Kumar Ratnam

எஸ். ஜெகநாதன் என்று இயற்பெயர் கொண்ட புவியரசு உடுமலைப்பேட்டைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் 1930 ஆம் ஆண்டு பிறந்தவர். இடைநிலை பட்டத்தைக் கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியிலும் தமிழ் வித்வான் பட்டத்தைப் பேரூர் தமிழ்க் கல்லூரியிலும் இவர் பெற்றார். இவர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்தார். சிறிதுகாலம் மட்டும் இயங்கிய வானம்பாடி இலக்கிய இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் இவரும் ஒருவர். ஷேக்ஸ்பியர், கலில் கிப்ரான், உமர் கய்யாம், ஓஷோ, ஃபியோடார் டாஸ்டோவ்ஸ்கி மற்றும் ரவீந்திரநாத் தாகூர் ஆகியோரின் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவரது ‘புரட்சிக்காரன்’ கவிதை 2007ல் மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. இக்கவிதை காஜி நஸ்ருல் இஸ்லாம் எழுதிய The Revolutionary என்ற கவிதையின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். இவரது கவிதைத் தொகுப்பான “கையொப்பம்” 2009ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. இவர் எழுதிய ”முக்கூடல்” எனும் நூல் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதுக்கவிதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

உலகத்தின் தலைசிறந்த புத்தகம் என பலராலும் கருதப்படுவது Mikhail Naima எழுதிய The Book of Mirdad. இதை மூன்று வருடம் தொடர்ந்து பாடுபட்டு ’மிர்தாதின் புத்தகம்’ என்னும் தலைப்பில் புவியரசு மொழிபெயர்த்திருக்கிறார். உரையாடல்கள் மூலம் வளரும் இந்த நூல் பல்வேறு இனமக்களின் ஒற்றுமையையும், பிரபஞ்ச அன்பையும் பற்றி பேசுகிறது.

’மிர்தாதின் புத்தகம்’ என்ற நூலுக்கு 2015-ம் ஆண்டு மொழிபெயர்ப்பு பிரிவில் புவியரசு அவர்களுக்கு பரிசு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## ராஜாராமன்

கணிமை விருது

**Information technology in Tamil Award**
**Given in memory of Sundara Ramaswamy**

**Recipient: S.Raja Raman**
Sponsored by SuRa Memorial Fund Kalachuvadu Trust

‘நீச்சல்காரன்’ என்ற பெயரில் ஐந்து ஆண்டுகளாக வலைப் பூ ஒன்றை நடத்திவரும் ராஜாராமன் தற்போது தனியார் நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுகிறார். இவருக்கு வயது இருபத்தெட்டு. தமிழ்ச் சந்திப் பிழை திருத்தியை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இணையத்தில் இலவசமாக வெளியிட்ட இவர், சமீபத்தில் வாணி என்னும் தமிழ் எழுத்துப் பிழை திருத்தியை உருவாக்கியிருக்கிறார்.
“வாணி எழுத்துப் பிழை திருத்தியை உருவாக்க நான்கு வருடம் எனக்குப் பிடித்தது. வார்த்தைகளைத் திருத்துவதற்காக இதை வடிவமைத்திருக்கிறேன். அது மட்டுமல்ல இது முந்நூறுக்கு மேற்பட்ட பிறமொழிச் சொற்களையும் அடையாளம் கண்டுகொள்ளும். அந்தப் பிறமொழி சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் இந்தத் திருத்தி பரிந்துரைக்கும்” என்று சொல்கிறார் ராஜாராமன்.

இவரிடம் ‘சந்திப் பிழையுடன் எழுதுகிறீர்கள்’ என்று ஒருவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த விமர்சனத்தைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள இயலவில்லை ‘நீச்சல்கார’னால். சந்திப் பிழையைச் சரிசெய்யும் மென்பொருள் ஒன்றைக் கண்டடையும் முயற்சியை மேற்கொண்டார். அப்படி முதலில் இவர் உருவாக்கியதுதான் ‘நாவி’ என்னும் தமிழ் சந்திப் பிழை திருத்தி. தனக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் பயன்படும்படி அதை இணையத்தில் இலவசமாக வழங்குகிறார். இணையத்தில் தமிழ் மொழியைப் பரவலாக்கவும், மேம்படுத்தவும் புதுமையான சில மென்செயலிகளையும் உருவாக்கியிருக்கிறார். தமிழர்களின் கலை, அறிவுசார்ந்த விளையாட்டுகளை அடிப்படையாக வைத்து சில மென்செயலிகளையும் இவர் வடிவமைத்திருக்கிறார். ஆடுபுலி ஆட்டம், தமிழ் வார்த்தை விளையாட்டுகள், கோலங்கள் போன்றவற்றை இணையத்தில் பயன்படுத்தும்படி இந்த மென் செயலிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழியைப் பரவலாக்கும் செயலிகளை உருவாக்கிவருவதோடு, விக்கிப்பீடியாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொகுத்திருக்கிறார் இவர். அத்துடன், புதிதாகக் கட்டுரைகளைத் தமிழ், ஆங்கிலம், இந்தி என மூன்று மொழிகளிலும் எழுதிவருகிறார். “தமிழ் விக்கிப்பீடியாவில் கட்டுரைகளில் புள்ளிவிவரச் சேகரிப்புக்கும், கட்டுரைகளை விரிவாகப் படிப்பதற்கும் வழிசெய்யும் பல்வேறு இணைப்புகளைச் சேர்க்கும் ஒரு தானியங்கியை இவர் வடிவமைத்துள்ளார்.

இந்த இளம் வயதிலேயே தன்னலம் கருதாது தமிழ் வளர்ச்சிக்கு கணிமை மூலம் இவர் செய்துவரும் பணி அளப்பரியது. தமிழ் இலக்கியத் தோட்டம், கணிமை விருதுக் குழுவுடன் இணைந்து திரு ராஜாராமனுக்கு 2015ம் ஆண்டுக்கான சுந்தர ராமசாமி நினைவு விருதை வழங்குவதில் பெருமையடைகிறது.



## சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன்

இலக்கியச் சாதனை சிறப்பு விருது

**Special Recognition Award given in memory of Ranjith Selva**

**Recipient: So. Pathmanathan**
Sponsored by Bairavee Ranjith

சோ.பத்மநாதன், சிப்பித்தறை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர். ஆங்கில விரிவுரையாளராகவும் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றவர். கவிஞராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் தம்பெயர் நிறுவிய இவர் ‘வடக்கிருத்தல்’ (1998), ‘நினைவுச் சுவடுகள்’ (2005), ‘சுவட்டெச்சம்’ (2010) ஆகிய மூன்று சொந்தக் கவிதைத் தொகுதிகளோடு ‘ஆபிரிக்கக் கவிதை’ (2000), தென்னிலங்கைக் கவிதை (2003), ஆகிய மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதிகளும் வெளியிட்டவர். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மூன்று நாடகங்களையும் (2007), ஈழத்துப் பன்னிரண்டு சிறுகதைகளையும் (2013), ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் 72 ஐயும் (2014), ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ‘பர்மிய பிக்கு சொன்ன கதைகள்’ (2011) என்ற நூலும் இவரால் மொழிபெயர்க்கப்பட்டதே.

இலங்கை அரசின் சாகித்திய விருதுகளை இரு முறையும் வடக்கு மாகாண இலக்கிய விருதைப் பல முறையும் பெற்றவர் சோ.பத்மநாதன். இவை தவிர, ஆளுநர் விருதும் கலாபூஷண விருதும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியத்திலும், மொழி பெயர்ப்பிலும் அயராது உழைத்து தமிழ் மேம்பாட்டுக்கு சேவையாற்றிய சோ.பத்மநாதன் அவர்களுக்கு 2015ம் ஆண்டுக்கான இலக்கியச் சாதனை சிறப்பு விருதை வழங்குவதில் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.

---



## பிரெண்டா பெக்

**Special Recognition Award**

**Recipient: Dr. Brenda Beck**
Sponsored by
*Canadian Tamil Congress*

Dr. Brenda Beck holds a D.Phil. in Social Anthropology from Oxford University (1968). Her research work has focused on the Culture and Folklore of Tamilnadu. From 1969 to 1983 she taught Anthropology and South Asian Studies at the University of British Columbia.

In 1983 Dr. Beck resigned that Full Professorship to focus more effectively on the broader field of Educational Public Communications. Initially Dr. Beck worked for a consulting firm in Toronto. Then in 1986, she formed her own video production company. In 2004 she also started a federally licensed charitable foundation: The Sophia Hilton Foundation of Canada. In addition, Dr. Beck currently holds an honorary non-salaried position of Adjunct Professor in the Department of Anthropology at The University of Toronto. She has lectured extensively around the world and has twice received all-expenses paid invitations from India to share her work with the people of Tamilnadu.

Working through The Sophia Hilton Foundation of Canada Dr. Beck recently completed directing the animated production of Tamil oral epic known in English as THE LEGEND OF PONNIVALA. Her goal has been to share this culturally important story with people of all ages and to help viewers better appreciate some of the joy, colour and depth of South Indian culture in general. Her 26 episode animated series has been broadcast in both English and Tamil by the Asian Television Network in Canada and in Tamil only by Thanthi TV Chennai.

Dr. Beck has now fashioned a two-volume full-colour graphic novel set intended to summarize this video series. It is with great pleasure that the Tamil Literary Garden confers the Special Recognition Award for year 2015 to Dr. Brenda Beck for her exemplary services to Tamil.



## ரேணுகா மூர்த்தி

**Scholarship Award to Student for Outstanding Essay**

**Recipient : Renuka Murthi**
Sponsored by
Bahir Vivekanand B.Sc, D.Ch

The Tamil Literary Garden Scholarship was established in order to encourage and promote Tamil Studies in the diaspora, particularly among the second generation. The essay topic for this year is 'Innovative Forms of Tamil Expression Today'. The essay presented this year by Renuka Murthi was both thorough and clearly articulated and was selected by the panel of judges as the best.

